www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண்.009839 / டி1 /2024 நாள்.22.06.2024

பொருள் : தொடக்கக் கல்வி சார்நிலைப் பணி - 2024-25ல் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு கல்வி தகவல் மேலாண்மை முறைமை EMIS இணைய வழி மூலம் நடைபெறுதல் - திருத்திய காலஅட்டவணை வெளியிடுதல் - சார்பு

பார்வை 1. அரசுக் கடிதம் எண் 3835/பக5(1)/2024-1 பள்ளிக் கல்வித் துறை நாள் 29.04.2024

2. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.9839/டி1/2024 நாள் 07.05.2024

பார்வை 1ல் கண்டபடி தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான 2024-25ம் கல்வியாண்டிற்கு பொதுமாறுதல் கலந்தாய்வு மே-2024 மாதம் தொடங்கி, நடத்திட அனுமதிக்கப்பட்டது. அதன்படி கலந்தாய்விற்கான உத்தேச காலஅட்டவணை பார்வை-2ல் காணும் செயல்முறைகளின் மூலம் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) அனுப்பப்பட்டது.

அதன் பின்னர் 2024-25ம் கல்வியாண்டில் நடைபெறவுள்ள பொதுமாறுதல் கலந்தாய்விற்கு முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஆர்வத்துடன் ஆசிரியர்கள் மாறுதல் கோரி விண்ணப்பித்து வந்ததாலும், பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து மாறுதலுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை நீட்டிக்குமாறு வரப்பெற்ற கோரிக்கையினை ஏற்று, பொதுமாறுதல் கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்கும் காலஅளவை 25.05.2024 வரை நீட்டிக்கப்பட்டது.

தற்போது கல்வி தகவல் மேலாண்மை முறைமை EMIS இணைய வழி மூலம் நடைபெறும் பொது மாறுதல் கலந்தாய்விற்கான திருத்திய கால அட்டவணை இத்துடன் இணைத்து அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.

இணைப்பு: கலந்தாய்வு காலஅட்டவணை

22.6.24

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்:

அனைத்து மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

நகல் :

1. அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6 தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. திரு. P.மகேஷ் CTO,SSA, சென்னை -6. (உரிய தொடர் நடவடிக்கைக்காக)

www.Padasalai.Net

## தொடக்கக் கல்வி இயக்ககம்

### 2024-25 ம் கல்வியாண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வு அட்டவணை

| வரிசை எண். | இயக்ககம் | பதவி | கலந்தாய்வு நடைபெறும் நாள் |
|---|---|---|---|
| 1. | DEE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பங்களின் முன்னுரிமைப் பட்டியல் (Seniority List ) வெளியிடுதல் | 25.06.2024 செவ்வாய் |
| 2. | DEE | முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் (Claims and objections) | 26.06.2024 முதல் 28.06.2024 வரை |
| 3. | DEE | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிப் பட்டியல் வெளியிடுதல் (Release off seniority list ) | 29.06.2024 சனி |
| 4. | DEE | நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 01.07.2024 திங்கள் |
| 5 | DEE | தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 02.07.2024 செவ்வாய் |
| 6. | DEE | நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 03.07.2024 புதன் |
| 7 | DEE | தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 03.07.2024 புதன் |
| 8. | DEE | நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 04.07.2024 வியாழன் |
| 9 | DEE | தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 04.07.2024 வியாழன் |
| 10. | DEE | நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம் ) | 05.07.2024 வெள்ளி |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 11. | DEE | தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 05.07.2024 வெள்ளி |
| 12. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு ( ஒன்றியத்திற்குள்) | 06.07.2024 சனி |
| 13. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 06.07.2024 சனி |
| 14. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு ( கல்வி மாவட்டத்திற்குள் ) | 12.07.2024 வெள்ளி |
| 15. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு ( வருவாய் மாவட்டத்திற்குள் ) | 13.07.2024 சனி |
| 16. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பொதுமாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள் ) | 15.07.2024 திங்கள் |
| 17. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பொதுமாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள் ) | 18.07.2024 வியாழன் |
| 18. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு ( மாவட்டம் விட்டு மாவட்டம்) | 22.07.2024 முதல் 24.07.2024 வரை |
| 19. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பொதுமாறுதல் கலந்தாய்வு ( மாவட்டம் விட்டு மாவட்டம் ) | 26.07.2024 முதல் 31.07.2024 வரை |

தொடக்கக் கல்வி இயக்குநர்

22.6.24